**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 202** **நாள் : 12.06.2026**

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.**

இன்று (12.06.2026) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் உள்ள அலுவலகக் கூட்டரங்கில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி திட்டப் பணிகளை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள், ஆய்வு செய்து பேசும்போது தெரிவித்ததாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை, அவர்கள் பணிபுரிவதற்கான வருகைப் பதிவேடு விவரம், தூய்மைப் பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்படும் வாகனங்கள், பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள், வீடுகள்தோறும் பிரித்து பெறப்படும் குப்பைகள், தோட்டம் மற்றும் தேங்காய் கழிவுகள், ஈரம் மற்றும் காய்ந்த கழிவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், சாலைகளின் ஓரங்களில் உள்ள மண் மற்றும் துகள்களை அகற்றும் சாலை சுத்தம் செய்யும் இயந்திரங்களின் பயன்பாடு, அகற்றப்பட்ட கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள், மாநகராட்சிப் பகுதிகளில் அகற்றப்பட்ட சுவரொட்டிகள் மற்றும் விதிக்கப்பட்ட அபராதம், உயிரி எரிவாயு நிலையங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு, சென்னை மாநகரினை தூய்மையாகப் பராமரித்திடவும், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சென்னையில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்து, சென்னையில் நெகிழிப் பயன்பாட்டை முற்றிலும் தவிர்த்திடும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், அம்மா உணவகங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அம்மா உணவகங்களில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், தரமான உணவினை மக்களுக்கு வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தெருநாய்களை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், நாய் இனக்கட்டுப்பாட்டு மையத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, தெருநாய்களை கட்டுப்படுத்திட தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மாடுகள் சாலைகளில் சுற்றித்திரிவதை கட்டுப்படுத்திடும் வகையில் அதன் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்திடவும், மீறுபவர்கள் மீது அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், மாடுகளை வைத்திருப்போர் சென்னையில் ஒவ்வொரு மண்டலத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ள கால்நடை காப்பகங்களில் மாடுகளை வைத்து பராமரித்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

மாநகரப் பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்திடவும், போக்குவரத்து சீராக நடைபெறுகின்ற வகையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி வளைவான சாலைப் பகுதிகளில் உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களின்படி, சாலை வளைவினை அமைத்திடவும், நெருக்கடியின்றியும் விபத்தின்றியும் சீரான போக்குவரத்து நடைபெறுவதை உறுதிசெய்கின்ற வகையில் சாலைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள பூங்காக்கள் அதன் பராமரிப்பு மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து ஆய்வு செய்து, சென்னையில் பசுமைப் பரப்பினை அதிகரித்திடும் வகையில், அதிகளவில் மரக்கன்றுகளை நட்டு பராமரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளையும், கால்வாய்களில் மேற்கொள்ளப்படும் தடுப்புச் சுவரினை உயர்த்தி கட்டும் பணிகள் மற்றும் தூர்வாரும்

பணிகளையும் விரைந்து மேற்கொண்டு மழைக்காலத்திற்குள் முடித்திட வேண்டும். மாநகரப் பகுதிகளில் போதிய மின்விளக்குகள் இருப்பதை உறுதி செய்து தேவைப்படும் இடங்களில் கூடுதல் மின் விளக்குகள் அமைத்து பராமரித்திட வேண்டும்.

மாநகராட்சி நகரமைப்புத் துறையில் கட்டட அனுமதிக்காக இதுவரை விண்ணப்பித்த நபர்களின் விவரம், அனுமதி வழங்கப்பட்ட நபர்களின் விவரம் குறித்தும் கேட்டறிந்து, எவ்வித தவறுகளும் இன்றி உரிய நாட்களுக்குள் கட்டட அனுமதியினை வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் நடைபெற்று வரும் பாலப்பணிகள், மேற்கொள்ளப்பட வேண்டிய பாலப்பணிகளை, தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து இப்பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

சிறப்புத் திட்டங்கள் துறையின் சார்பில் மெரினா கடற்கரையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீலக்கொடி கடற்கரைத் திட்டப் பணிகள், வில்லிவாக்கம் குளம் மேம்பாட்டுப் பணிகள், அமைக்கப்பட்டு வரும் நீர் உறிஞ்சும் பூங்காக்கள், வாகன நிறுத்த மேலாண்மை, கழிவறை பயன்பாடுகள், அறிவுசார் போக்குவரத்து அமைப்புகள் குறித்தும் தலைமைச் செயலாளர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டு, துறை சார்ந்த அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர்கள் முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப., (சுகாதாரம்), திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (கல்வி), திரு.செ.சரவணன், இ.ஆ.ப., (பணிகள்), துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி சித்ரா விஜயன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு), திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**